ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2091/4 - 2018 ඔක්තෝබර් මස 01 වැනි සඳුදා - 2018.10.01

*2091/4 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/ 1978* (x)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதும் PV 66705 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதுமான காட்சு (KAATSU) - அதிஉயர் மருத்துவ தொழில்நுட்பவியல் பயிற்சி நிலையம் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2016, ஏப்பிறல் 08 ஆந் திகதிய 1961/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய அதற்கான II ஆம் அட்டவணையின் முறையே I ஆம் மற்றும் II ஆம் நிரலிலுள்ள அதனது நேரொத்த பதிவில் காணப்படும் “கணக்கியலில் முகாமைத்துவ இளமாணி சிறப்புப் பட்டம்” என்னும் பதிவை உடனடுத்து இதற்கான II ஆம் அட்டவணையின் முறையே I ஆம் மற்றும் II ஆம் நிரலின் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

*நிபந்தனைகள்*

காட்சு (KAATSU) - அதிஉயர் மருத்துவ தொழில்நுட்பவியல் பயிற்சி நிலையம் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) பௌதிக விஞ்ஞானங்களில் கல்வி இளமாணி சிறப்புப் பட்டம் தொடர்பில் இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கான மாணவர்களை அனுமதிக்கின்றபோது க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரே தடவையில் இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல், தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் இருந்து மூன்று (03) சாதாரண (S) சித்திகளை ஆகக்குறைந்த நுழைவுத் தகைமை ஒன்றாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

1A - PG 4253 — 507 (2018/10)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை II**

| நிரல் I<br><br>பட்டம் | நிரல் II<br><br>பட்டத்திற்கான சுருக்கீடு |
|---|---|
| பௌதிக விஞ்ஞானத்தில் கல்வி இளமாணி சிறப்புப் பட்டம் | பிஈடி (பௌதிக விஞ்ஞானம்) |

கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ,
உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2018, செத்தெம்பர் 28.

10-439

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.